, [1972 மார்ச் 8

மணிமுத்தாறு தண்ணீர்

*** 367 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்தில் வடக்கு கோடை மேல், தெற்கு கோடை மேல், அழகியனிகால், நதியுண்ணிகால், ஆகிய மூன்று கால்வாய்களுக்கு விவசாயத்திற்கு மணிமுத்தாறு தண்ணீர் விடப் படுகிறதா?

(இ) ஆம் எனில், அதன் விபரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா . (அ) இல்லை.

(இ) இவ்வினா எழாது.

மலட்டாற்றுத் திட்டம்

*** 368 வினா—திரு. எஸ். காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை கோட்டம், முதுகுளத்தூர் வட்டம், மலட்டாறு திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் என்றால், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இத்திட்டத்தைப் பற்றிய தொழில்நுட்பக் கூறுகள் தல அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளன.

திரு. எஸ். காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி : இந்த மலட்டாறுத் திட்டம் இரண்டு, மூன்று ஆண்டுகளாக ஆய்வில் இருக்கிறது. அந்தப் பின்தங்கிய பகுதிக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்கும் வகையில் அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றிக் கொடுக்க அரசு துரித நடவடிக்கை எடுக்கப் படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சுமார் 60 லட்சம் ரூபாய் செலவில் 5,000 ஏக்கர் நிலத்தில் பாசனம் அளிக்கும் திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னால் அங்கு கிடைக்கும் நீரின் அளவு, நீரியல் தன்மை ஆகியவற்றை அறிந்து கொள்ள வேண்டும்.